தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 21-7-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## நேந்திரன் வாழை விலை அதிகரிக்கும்; பூவன் மற்றும் கற்பூரவள்ளி வாழைக்கு நிலையான விலை இருக்கும்

இந்தியாவின் வாழை உற்பத்தி கடந்த 2013-14ம் ஆண்டில் 29.72 மில்லியன் டன்களாகும். இவற்றுள் 19.01 சதவீதம் பங்களிப்புடன் தமிழ்நாடு முன்னனியில் உள்ளது. தொடர்ந்து மகாராஷ்டிரா (16.25 %) மற்றும் குஜராத் (14.22 %) ஆகியவை உள்ளன. இந்தியாவின் முக்கிய வாழை ஏற்றுமதி இலக்காக வளைகுடா நாடுகள் உள்ளன. இவற்றுள் 2014-15ம் ஆண்டின் படி, ஐக்கிய அரபு நாடுகள் முன்னனியில் உள்ளது. தொடர்ந்து சவூதி அரேபியா, குவைத், மற்றும் ஓமன் ஆகிய நாடுகள் உள்ளன. வாழை ஏற்றுமதியில் தூத்துக்குடி துறைமுகம் கொள்ளளவில் முதலிடத்திலும், நவசேவா துறைமுகம் ஏற்றுமதி மதிப்பில் முதலிடத்திலும் உள்ளன. இந்தியாவின் வாழை ஏற்றுமதியில் தூத்துக்குடி துறைமுகம் 44 சதவீதத்தை மேற்கொள்கிறது. மேலும் தென்னிந்தியாவில் கொச்சின் துறைமுகம் மற்றும் திருவனந்தபுரம் சரக்குவானூர்தி முனையம் ஆகியன முக்கிய ஏற்றுமதி இடங்களாகும்.

தமிழ்நாட்டில், வாழை சாகுபடி ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் முக்கியமாக மேற்கொள்ளப்படுகிறது. தற்போது வாழை வகைகளான பூவன், கற்பூரவள்ளி மற்றும் நேந்திரன் வாழை விலை கோயம்புத்தூர் மொத்த சந்தையில் முறையே கிலோவிற்கு ரூ.16, ரூ.16 மற்றும் ரூ.25 வரை விற்கப்படுகிறது. வாழை ரகங்களில் கற்பூரவள்ளி அதிக இனிப்புத் தன்மையும் மற்றும் தமிழ்நாட்டில் பூவன் ரகம் வழிபாடு மற்றும் விழா காலங்களுக்கு ஏற்புடையதாக கருதப்படுகிறது. பெரும்பான்மையான நேந்திரன் சாகுபடி கோயம்புத்தூர், ஈரோடு, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் கேரளா சந்தை தேவையை பொருத்து மேற்கொள்ளப்படுகிறது. பாரம்பரியமாக நேந்திரன் கேரளா மக்களின் உணவு மற்றும் சிப்ஸ் தயாரிப்பில் முக்கிய

பங்களிக்கிறது. எனவே, நேந்திர வாழையின் விலை கேரள மக்களின் தேவையை பொருத்து நிர்ணயிக்கப்படுகிறது. மேலும் கேரளாவில், வரும் ஒணம் பண்டிகையை ஒட்டி நேந்திரன் வாழையின் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டுஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் வாழை ரகங்களான பூவன், மற்றும் கற்பூரவள்ளி வாழையின் கடந்த 12 வருடங்களாக நிலவிய மாதந்திர விலை மற்றும் நேந்திரன் வாழையின் கடந்த 7 வருடங்களாக நிலவிய மாதந்திர விலை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின் படி வாழை ரகங்களான பூவன் மற்றும் கற்பூரவள்ளி விலை ஆகஸ்டு –செப்டம்பர், 2015ல் நிலையாக இருக்கும் எனவும் இதன் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ.15 -17 வரையும் மற்றும் நேந்திரன் வாழையின் சராசரி பண்னை விலை கிலோவிற்கு ரூ.28 – 30 வரையும் இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட வாழை வகைகளில், நேந்திரன் வாழையின் விலை வரும் ஒணம் பண்டிகையை ஒட்டி அதிகரிக்க வாய்ப்புள்ளது. பெதுவாக வருடந்தோறும் ஏற்படும் ஏப்ரல்-மேகால ‘‘சித்திரைசுழி’’– சுழல் காற்று தாக்கம் இவ்வருடம் இல்லாததால் மற்ற வாழை வகைகள் பூவன் மற்றும் கற்பூரவள்ளியின் விலை நிலையாக இருக்கும். இதன் பொருட்டு விவசாயிகள் அறுவடைக்கு முன்பு சந்தை விலை நிலவரங்களை அறிந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள:</u>**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி:0422 -2431405

**<u>மேலும் தொழில் நுட்பவிவரங்களுக்கு,தொடர்பு கொள்ளவும்:</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பழப்பயிர்கள் துறை,
தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611269

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்